RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2267

# மானுடவியல் நோக்கில் தங்கர்பச்சானின் சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி

யா. சாம்ராஜ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்புத்தூர்-630211, தமிழ்நாடு, இந்தியா

# An Anthropological Perspective of Thangarbachan's Sithamparathil Oru Appasaamy

**Y. Samraj** [a, *]

[a] Department of Tamil, Arumugam Pillai Seethai Ammal College, Thiruppattur- 630211, Tamil Nadu, India

* Corresponding Author: ysamraj2106@gmail.com

Received: 22-09-2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

Anthropology is the study of human heritage. Anthropological study helps one to understand a society's physical forms, customs, dress, speech, religion etc. In particular it is the study of human beings. Shortly Anthropos+Logia is anthropolgy. In short, it means studying people. Anthropology simply means that there are two people in particular, their character, mind and behavior will be different. In comparison, one may be steeped in devotion, one may be of the opinion that there is no God, one may be fixed in caste, and another may hold the theory that everyone has the same blood. In particular, cultural anthropology sees the world through traditional ways and studies the knowledge and values of a society since ancient times and questions, Are the next generations following their ancestors? Based on this, this article aims to find out the artistic creations that deal with the practice of human activities, especially in movies.

**Keywords:** Anthropology, Thangarbachan, Sithamparathil Oru Appasaamy, Traditional

## முன்னுரை

பரத்து விரிந்த இவ்வுலகில் மனிதன் பல்வேறு விதமான நெருக்கடி மிகுந்த வாழ்வியலைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. குடும்பம், அவற்றை நடத்த பொருளாதாரம், குழந்தைகள் அவர்களின் வளர்ச்சிநிலை, கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம், அத்திருமணத்தில் ஏற்படுகிற மனக்கசப்பு, மனமுறிவுகள், இதன்வழி ஏற்படுகிற நிம்மதியின்மை, உடல்சோர்வு, நோயுற்றுக் காணப்படல், மனஅமைதி தேடி குடும்பத்தை விடுத்து தெய்வீகத்தை நாடுதல், அங்கேயும் அமைதியின்றி அலைபாயுதல், இவ்வாறாக மனிதன் பிறந்ததே சிக்கலுக்கு உரியதாக மாறிவிட்ட இந்தச் சூழலில் அதிலிருந்து எவ்வாறு விட்டுவிடுதலை பெறுவது குறித்து மிகையின்றி மிகவும் எதார்த்தத்தோடு இயக்குர் தங்கர்பச்சான் இயக்கிய “சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி” திரைப்படத்தில் மானுடவியலின் மாண்புகள் உணர்த்தும் போக்கை இக்கட்டுரை வழி அறியலாம்.

## தங்கர்பச்சானின் தனித்துவம்

மனித வாழ்வியலை பிரதிபலிக்கக்கூடிய திரைப்படங்கள் பெரும்பாலும் தோல்வியைத் தழுவினாலும், அவற்றில் காணலாகும் உறவுகளும் உணர்வுகளும் எடுத்தாளப்படும் விதம் குறிப்பிட்ட சிலரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் அமர்த்திவிடுகின்றது. மனிதன் சந்திக்கும் வெற்றி தோல்விகள், சந்தோசங்கள், துக்கங்கள் போன்றவற்றையும், கடந்தகாலச் சம்பவங்களை அசைபோட்டுப் பார்க்கும்

விதத்திலும், தங்கர்பச்சானின் திரைப்படைப்புகள் நமக்கு முன்னுதாரணமாய்த் திகழ்கின்றன. இவற்றில் மானுடம் சார்ந்த ஒப்பனைகள் அற்ற முகங்களே இவரின் படைப்புகளுக்கு பலம் சேர்க்கின்றது. 'மனித சமுதாயத்தின் மிகத்தொன்மையான அமைப்பாகத் திகழ்வது குடும்பமேயாகும். இது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும், பொதுவாக நிலவி வருகிறது. இன்று நூற்றுக்கணக்கான சமுதாயங்கள் காலங்காலமாகப் பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்திக்கொண்டு அதன் அமைப்பாலும் செயலாலும் வேறுபடுகின்றன. ஆனால் அனைத்திலும் குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும் இன்றியமையாத அடிப்படை அலகாகச் செயல்படுகிறது. அவ்வாறே மக்கள் வாழ்நாள் முழுவதும் எண்ணற்ற குழுக்களில் பங்குபெற்று அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டாலும் குடும்பம் என்னும் அமைப்பே முதலிடம் பெறுகிறது" கூடிவாழ்தல் குடும்பமாகும். குடும்பம் என்னும் இச்சொல் குடி, கூடி என்ற நிலையில் உருப்பெற்று உயிர்பெற்றிருப்பதை உணரலாம் (Bhakthavachala Bharathi, 2019).

## சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி திரைப்படத்தின் மையக்கரு

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை சிதைத்து திசைமாறும் நிலையில் குடும்பத்தில் கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளிடத்தில் பறிக்கப்படும் அன்பை, பாச உணர்வை மெய்பிக்கும் விதத்தில் இப்படைப்பின் மையக்கரு அமைந்துள்ளது.

## சிறப்பம்சம்

எப்படியும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக்காட்டுவது இவற்றின் சிறப்பம்சமாகும். 'சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி' படத்தில் உணர்வுகள் குறித்து 'மண்ணில் பிறப்பது வாழ்க்கை விடியற்காலையில் அவை கிளர்ச்சி கொள்ளும் செயல்திறனால் செழிப்புறும் இளமைக்காலத்தில் கண்கண்டதற்கு மேல் கனவு ஓடும் பாதையெல்லாம் பேரவா பூவிரிக்கும். இளமைக்குப் பிறகு வருவது யோசனை. சிந்தனையோடு செயல்படும் பொழுது பெரும் வெற்றிகளால் களிப்பு வரும் உற்பத்தி செய்வதில் உள்ளம் நெகிழும். பிறகு வருவது முதுமை. இப்போது அரைகுறை என்பது இல்லை" என்று வாழ்க்கை குறித்து விளக்கம் அளித்துள்ளார் (Madhusudhanan, 2010).

இப்படத்தில் தங்கர்பச்சான் - இங்கோவனாகவும், நவ்யாநாயர் - தேன்மொழியாகவும் நடித்துள்ளனர். இவற்றில் கணவனுக்கும் மனைவிக்குமான சமூகச் சூழல் எடுத்தாளப்பட்டுள்ளது. பொறுப்பற்று நடக்கும் கணவனின் செயல்களைச் சகித்துக்கொண்டிருக்கிறாள் தேன்மொழி. தன் கணவனுக்குப் பொறுப்பு வரும் என்ற மிகுந்த எதிர்பார்ப்பால் தினமும் பொழுதைக் கழிக்கிறாள்.

## பெண்ணுக்கான உணர்வு நிலை

பொதுவாகப் பெண்ணின் மனோபாவம் சற்று வேறுபட்டு அமைவதாகும். அவளின் உணர்வுக்கும் உறவுக்கும் எல்லை என்பது கிடையாது. திருமணமாகும் வரை என் தாய், தந்தை, தம்பி, அண்ணன், தங்கை, அக்கா என்று உரிமை பாராட்டிக் கொள்ளும் பெண், திருமணமான பின்பு புகுந்த வீடே ஆலயம், கட்டியவனே கடவுள் என் மாமா, என் அத்தை, என் நாத்தனார், என் கொழுந்தனார் என்று முற்றிலும் மனம் மாறுபடும் போக்கு எல்லாப் பெண்களுக்கும் உண்டாகும். திருமாங்கல்யம் தன் கழுத்தில் ஏறியதும் எல்லா நிலைகளையும் சகித்துப்போகும் போக்கும் சூழலும் நிறையவே காணப்படும்.

இவ்வாறாக இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு இப்படிப் பொறுப்பில்லாமல் திரிந்தால் குடும்பம் சீர் கெட்டுவிடுமே என்று பதைபதைக்கும் போக்கு 'சிதம்பரத்தில் ஓர் அப்பாசாமி' படத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. தன் கணவன் திருந்த வேண்டும் என்று இறைவனிடம் முறையிடும் மனைவி, இறைவனே கதி என்று திரியும் கணவனைச் சாடுகிறாள். சாமி சிலையை வெளியே எடுத்து எறிகிறாள்.

தேன்மொழி: 'எங்கள சந்தோசமா வச்சுக்காத சாமிய நான் மட்டும் சந்தோசமா வச்சுக்கணுமா? குழந்தைகள் சேத்துவச்ச உண்டியல் காச ஒடச்சி பூஜை பண்ணுகிற அளவுக்கு வெறிபுடிச்சுப்போச்சு" என்று அழுது தவிக்கிறாள்.

கிராமப்புறப் பெண்களின் நடைமுறைகளே நாகரீக சமூகத்திற்கு முதற்படி எனலாம். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பழமொழிக்கு ஏற்ப, தங்கள் கணவன் பெயரை யாரும் உச்சரிக்கக் கூடாது என்பதோடு, அவர்களும் உச்சரிக்க மாட்டார்கள். தன் கணவனே தவறு செய்தாலும், மற்றவரிடம் விட்டுக்கொடுக்காத போக்கு மிகுதியாகக் காணப்படும். தேன்மொழி தன் தங்கை திருமணத்தில் புகைப்படம் எடுத்துக்கொள்ள மறுக்கிறாள்.

தேன்மொழி: 'உங்க மாமா இல்லாம போட்டோ எடுத்தா அந்த போட்டோவுக்கு என்ன மதிப்பு இருக்கு" இது கிராமப்புற மக்களின் அசலான வாழ்க்கைக்கு மிகச்சிறந்த உதாரணம் எனலாம்.

## ஆணின் உணர்வுநிலை

திருமணம் முடித்தும் குடும்பத்தில் அக்கறையின்றிக் காணப்படும் ஆண்கள் பல பேர் இருக்கக் காணலாம். ஊரைச் சுற்றிவிட்டு உணவு கிடைத்தால் போதும் என்ற தாரக மந்திரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருப்பார்கள். இருந்தும் ஏதோ ஒரு சூழ்நிலையில் திருந்துவதற்கான சாத்தியக் கூறுகள் அமையும். அதேபோல குடும்பத்தைப் பொருட்படுத்தாமல் ஆன்மீகமே ஆதாராம் என்று வாழும் குடும்பத் தலைவனுக்கு ஒரு மாறுதல் பெற வாய்ப்புக் கிட்டுகிறது. குருகுலத்தில் உணவருந்தும்போது ஒரு பெண் குழந்தை அழுகிறது. ஏன்? எதற்காக அழுகிறாய்? என்று வினா எழுப்புகிறார் இளங்கோவன்.

குரு: 'இவங்க அப்பா கொஞ்சங்கூட பொறுப்பில்லாம எங்கையோ விட்டுட்டு ஓடிப்போயிட்டாராம். இவங்க அம்மாவாலயும் இவங்கள கவனிக்கமுடியாம கிணத்துல விழுந்து இறந்து போயிட்டாங்களாம். பாவம் இவங்க, ஆதரவு இல்லாம நின்னுட்டிருந்திருக்காங்க. நம்ம தலைமைதான் ஹைதராபாத்துல இருக்கிற நம்ம பிராஞ்சுக்கு அனுப்பி அங்க நம்ப பள்ளி கூடத்துல படிக்க வைக்களாமுனு சாமிஜி கூட்டிட்டு வந்திருக்காரு." என்றதும், இளங்கோவனின் உள்ளுணர்வு பேச ஆரம்பிக்கிறது.

தான் பெற்ற செல்வங்களைப் பறிதவிக்கவிட்டுவிட்டு ஆன்மீகத்தில் மூழ்கிவிட்டோமே என்று பதறும் போக்கு அதிகரிக்கிறது. குடும்பத்தை நினைக்கிறார். எப்படி இருப்பார்களோ என்று பலவாறு மனம் பேசத் தொடங்குகிறது.

இளங்கோவன்: என் பொண்டாட்டி பிள்ளைகள கடவுள் பாத்துக்குவார்ல சுவாமிஜி.

குரு: உன்னமாதிரி ஆளுகளோட வேலையப் பாத்துக்குறதுதான் கடவுளோட வேலையா? உன் மனைவி எங்கயாவது வேலை பாக்குறாங்களா?

இளங்கோவன்: இல்ல

குரு: அவங்க பாக்குறதுக்கு எப்படி இருப்பாங்க

இளங்கோவன்: பரவாயில்ல, பாக்குறதுக்கு நல்லா இருப்பாங்க.

குரு: அப்புறம் என்ன சாமி கவல

இளங்கோவன்: என்ன சொன்ன...

குரு: பாக்குறதுக்கு அழகா இருப்பாங்களா? பொளச்சுக்குவாங்க. அதான் சொன்னேன். நீங்க இந்த ஆசிரமத்துக்கு வந்தது அமைதியைத் தேடித்தானே

இளங்கோவன்: ஆமாங்க, சுவாமிஜி

குரு: உங்கள மாதிரி ஆளுங்க எங்க போனாலும் அமைதி கிடைக்காது. மனைவி குழந்தைகளோட சந்தோஷமா வாழ்ந்திருந்தா, அங்கே நீ கேக்குற அமைதி அங்கயே கெடச்சிருக்கும்.

நீங்க உங்க கடைமைகளை மறந்துட்டு பிரச்சனைகளைச் சந்திக்க முடியாம ஒழிஞ்சுக்கிட்டா அமைதி கெடச்சிடுமா? சன்னியாசினா சாதாரண விஷயமா? இந்த உலகத்தில இருக்கிற எதுமேலயும் ஆசை வைக்காம எல்லாத்தையும் விட்டுட்டு வர்றதுதான் சன்னியாசம்.

என்று புத்தி புகட்டிய பிறகு திருந்துகிறார் இளங்கோவன். இதே நிலைப்பாங்கு ஏதாவது ஒரு மனிதனின் வாழ்வில் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நடந்து கொண்டிருப்பதை உணரலாம். கணவன் மனைவிக்குமான உறவில், உணர்வில் மனசாட்சிக்கு விரோதமான நிகழ்வுகள் நடந்தால் குடும்பம் சிதறுண்டு போய்விடும். அவையே கணவன் மனைவியிடயே ஏற்படும் புரிதலின்போது அவை நல்ல குடும்பமாக உருவாகக் காரணமாக அமைகிறது. தவறு செய்தால் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கும் பட்சத்தில், மனம் நெகிழ்வுற்று குதுகலம் உருவாகும். அவ்வகையில் மனம் மாறிய இளங்கோவன் தன் மனைவியிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்கிறார்.

இளங்கோவன்: 'என்னோட பேசு தேனு... இப்ப திருந்திட்டேன். எனக்கு இப்போ புத்தி வந்திருச்சு. ரெண்டு பெண் குழந்தைகளுக்கு அப்பாங்கிறத நான் இப்போ புரிஞ்சுக்கிட்டேன். இப்ப நீ வெளிய போகச்சொன்னாலும் போகமாட்டேன். இப்ப நான் சன்னியாசி இல்ல தேனு. பாரு, உனக்குப் புடிக்காத தாடிய நான் எடுத்துட்டேன். இங்க பாரு மாலையக் கழட்டிட்டேன். வேற துணி வாங்க காசு இல்லாமத்தான் இதே காவியப் போட்டிருக்கேன். வீட்டுல ஏதாவது வேற வேட்டியிருந்தா எடுத்துக்கொடு தேனு கட்டிக்கிறேன்."

என்று மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்கும்போது, ஒரு வருடம் தன்னையும் தன் பிள்ளைகளையும் விட்டு கணவன் பிரிந்திருந்தாலும், கணவன் திருந்தி வந்தபிறகு இமயமலைப்பாரம் குறைந்ததாக ஒவ்வொரு பெண்ணும் உணர்வாள் என்பது இதன்வழி புலனாகிறது.

## மனைவியின் உணர்வுநிலை

மனம் வருந்தி மீண்டும் குடும்பத்தில் இணையும் கணவனைப் பார்த்ததும் கசப்புணர்வு களையப்படுகிறது. இருந்தும் சிறு சிறு வருத்தங்கள் வருது எல்லா பெண்களுக்குமான இயல்பாகும். தன் கணவன் திருந்தி விட்டேன் என்று மன்னிப்புக் கேட்கும்போது,

தேன்மொழி: உங்கமேல உயிரே வச்சிருந்தவங்க எல்லாம் செத்துப் போயிட்டாங்க.

இளங்கோவன்: மனுசன் தப்பு பண்ணுறது இல்லையா, இவ்வளவு நாளும் என் மனசுல நீங்கதான் இருந்தீங்க. இந்த வெறும் காவித்துணிதான் இந்த உடம்ப போத்தி இருந்தது. இனிமே என் குழந்தைகளப் பிரிஞ்சு வாழ முடியாது தேனு.

தேன்மொழி: நீங்க ஏன் அழுகிறீங்க ஒரு வருடம் பூரா அழுதாலும் என் அழுகைக்கு ஈடாகுமா? ராத்திரி பகலா அவமானப்பட்டு, கஷ்டப்பட்டு எப்படி எல்லாம் இந்தக் குழந்தைகள காக்கப் போராடி இருப்பேன். எத்தன ராத்திரி தூங்காம அழுதுட்டு இருந்திருப்பேன். எனக்கு ஒரு பேப்பர் பேனா கிடைக்காதா? நானும் ஒரு சீட்டுல எழுதி ஒட்டி வச்சிட்டுப் போறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும். நீங்க ஆம்பள, ஊரெல்லாம் சுத்திட்டு திரும்பிவந்து சேந்துடுவிங்க. நானும் உங்களமாதிரிப் போயிருந்தா இந்த குழந்தைகளோட நிலைமை என்ன ஆகுறது."

எனப் பொறுப்போடு அழும்போது, கல்நெஞ்சம் படைத்தவனின் இதயமும் கனிந்துவிடும் இவ்வாறாக கணவன் மனைவியிடையேயும், குடும்பத்தாரிடையேயும், பெற்றோரிடையேயும் நிகழும் பாசப்பிணைப்பினை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது.

## முடிவுரை

யாராலும் வாசிக்க முடியாத பக்கங்கள் மனித மனநிலை ஆகும். குடும்பம் சார்ந்த மானுடப்பண்பு என்பது விசித்திரமானது. சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும் தன்மை கொண்டது. வாழ முயற்சிக்கும் போது வீழ்ச்சி தடுத்து, வாழவேண்டாம் என்ற இறுதிக் கட்டத்திற்கு அழைத்துச்

 DOI: 10.34256/irjt224s22267

சென்றுவிடும். தவறு செய்தவன் திருந்தினாலும் கூட, குடும்பத்தில் பாதிக்கப்பட்டவரின் மனநிலை, எவ்வளவு மருந்திட்டுத் தேற்றினாலும் ஆறாது. இருந்தும் குடும்பம் என்கிறபோது ஏற்ற தாழ்வுகளைச் சமமாக்கி பார்ப்பதில் மட்டுமே நிறைவான மகிழ்ச்சி குடும்பத்தில் குடிகொள்ளும் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

## References

Bhakthavachala Bharathi, (2019) Panpaattu Maanidaviyal, Adayalam Publication, Trichy, India

Madhusudhanan, M. (2010) Tamil Pudhukavithaikalum Meyyerachsinthanaikalum, Kavya Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License